முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.30.01.2026

O.S. No.71/2018

பிவா,சா-2 ஜோசப் ஞானசேகரன்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் 30 வருடங்களாக வசித்து வருகிறேன். இந்த வழக்கின் வாதி, பிரதிகளை தெரியுமா என்றால் தேவதாஸை தெரியும். தேவதாஸ் கேட்டுக்கொண்டதால் இந்த வழக்கின் மொழி கொடுக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை வழக்கறிஞருக்கு தேவதாஸ் சொன்னாரா என்றால் ஆமாம். அந்தோணி நாடாருக்கு 4 பிள்ளைகள். சூசை மரியான், இயேசு மரியாய், மரிய புஞ்பம், அன்புரோஸ் ஆகியோர்கள் ஆவார். அந்தோணி நாடாருக்கு வேறு சொத்துக்ள உண்டு என்றால் தெரியாது.

என் அம்மாவிற்கு சொத்துகள் எதாவது கொடுத்தார்கள் என்றால் இல்லை. வாய்மொழியாக ½ சென்ட் கொடுத்தார்கள் எழுத்துப்பூர்வமாக கொடுக்கவில்லை. என் அம்மாவிற்கு 1949 ல் திருமணம் நடந்தது. வழக்கு பட்டிகை சொத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன் .அதற்கு வடக்கே ரோடு , வாதி சொத்தின் தெற்கு பக்கம் தேவதாஸ் சொத்து என்றால் தேவதாஸ் மனைவியின் தாத்தா சொத்து ஆகும். தற்போது யார் வசம் உள்ளது என்றால் தெரியாது. தேவதாஸ் வீடு தெரியும். அது வாதி சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரி.

எனது பிரமாண வாக்குமூலத்தில் 963 ல் உள்ள் ½ சென்ட் இடத்தை பாதையாக பயன்படுத்துவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. எனது அம்மாவிடம் இருந்து தேவதாஸ் விலைக்கு வாங்கிய பிறகு பாதையாக பயன்படுத்துகிறார்கள். உண்மையில் எனது

அம்மாவிற்கு வாய்மொழியாக ½ சென்ட் உரிமையில் இல்லை என்றாலும், வாய்மொழியாக பிரதிக்கு விலைக்கு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. சுமார் 40 வருடமாக எனது அம்மா மேற்படி ½ சென்டை பாதையாக அனுபவித்து வந்தார் அதன்வழியாக 200 அடி துாரத்தில் உள்ள எனது அப்பா சொத்திற்கு சென்று தென்னங்காய்களை வெட்டி வரும் வழியில் உள்ள பாதை யில் உள்ள 2 தென்னையிலும் காய்களை வெட்டி எடுத்து வருவோம். உண்மையில் எனது அம்மா பெயரில் எந்த சொத்திற்கும் பட்டா ஏற்படவில்லை என்றால் சரி. வழக்கு பட்டிகை சொத்தில் எனது அம்மாவிற்கோ, பிரதிக்கோ எந்தமவிதமான உரிமை இல்லை என்றால் சரியல்ல.

பிரதி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் நான் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தை 2006 ல் இ,ருந்தே வாதிகள் விலைக்கு வாங்கி அனுபவித்து வருக்கிறார்கள் என்றால் தெரியாது. வழக்கு தொடர்பாக எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றாலும் நான் சொல்லும் சர்வே எண்ணும் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாதது என்றால் சரியல்ல.